தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATURE LIBRARY
17 சன 1979
MADRAS

வியாழக்கிழமை, 1978 செப்டம்பர் 7

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

உருளைக்கிழங்கு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள்

*வினா—திரு. க. அரங்கசாமி: திரு. கே. உச்சி: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) நீலகிரி மாவட்டத்தில் அதிக மழை காரணமாக உருளைக் கிழங்கில் பொன்னிற கிருமி நோய் ஏற்பட்டு விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் அரசிற்குக் கட்ட வேண்டிய கடனை ரத்து செய்யும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், நடப்பாண்டில் அமுல்படுத்தப் படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரை ரத்து செய்யும் உத்தேசம் இல்லை. உருளைக்கிழங்கு பயிரிடுவதற்கு அரசு கடன் வழங்குவதில்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, கோரம் இருக்கிறதா என்பதை முதலில் பார்த்துக் கொள்ள வேண்டும். வந்திருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோரம் இருக்கிறதா இல்லையா என்பதைப் பார்த்துவிட்டுத்தான் நான் இங்கே வந்திருக்கிறேன். கோரம் இருக்கிறது.

1978 செப்டம்பர் 7]

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, கடந்த ஆண்டு அளவுக்கு அதிகமான மழை பெய்ததால் நீலகிரியில் உருளைக்கிழங்குப் பயிர் பொன்னிற கிருமி நோயால் பாதிக்கப்பட்டது. நடப்பாண்டில் மழை போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் உருளைக் கிழங்குப் பயிர் பாதிக்கப்பட்டிருக்கிறது. ஓரளவுக்குத் தண்ணீர் பாய்ச்சி உருளைக் கிழங்குப் பயிர் செய்தவர்களுக்குக் கடந்த ஆண்டு 45kg. துண்டுக்கு 60 அல்லது 70 ரூபாய் விலை கிடைக்கிறது; நடப்பாண்டில் 30 அல்லது 40 சதவிகிதம் தான் மகசூல் கிடைத்திருக்கிறது. ஆகவே கூட்டுறவுக் கடன்களை இந்த நடப்பாண்டுக்காவது ரத்து செய்யும் கோரிக்கையை அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல கடந்த ஆண்டு இயற்கையின் உத்பாதத்தினால் ஏற்பட்ட அழிவு காரணமாகத் தமிழக அரசு அனுதாபத்தோடு இந்தப் பிரச்சனையைப் பரிசீலனை செய்து, சில சலுகைகளை அளித்திருக்கிறது, 1977, கார் பருவத்தில் மத்திய கூட்டுறவு வங்கி, விவசாய நாணயச் சங்கங்கள் மூலமாக முழு மாவட்டத்திற்கும் 113 லட்சம் ரூபாய் குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அதில் ஊட்டி வட்டாரத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 6 கிராமங்களுக்கு வழங்கிய குறுகிய கால கடன் 22.47 லட்சம் ரூபாய் நடுத்தர காலக் கடனாக மாற்றப்பட்டிருக்கிறது. நீலகிரி மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து 64.41 லட்சம் ரூபாய் குறுகிய கால விவசாயக் கடனாக 1977-ல் கடை போக உருளைக்கிழங்குப் பயிருக்குக் கொடுக்கப்பட்டது. ஊட்டி, குன்னூர் போன்ற பகுதிகளில் பொன்னிறக் கிருமி நோயால் உருளைக் கிழங்குப் பயிர் பாதிக்கப்பட்டிருப்பதால், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஊட்டி பகுதிக்கு அணவாரி சான்றிதழ் அளித்துள்ளார். அதனால் அந்த அடிப்படையில் அந்தப் பகுதி விவசாயிகளுக்கு மாற்று வசதிகள் அளிக்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குன்னூர் வட்டாரத்திற்கும் அணவாரி சான்றிதழ் அளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அணவாரி சான்றிதழ் கிடைத்ததும் அங்கும் அதைப் போன்ற மற்ற பகுதிகளுக்கும் தக்க மாற்று வசதிகளைச் செய்து கொடுப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. கே. உச்சி: தலைவரவர்களே, குறுகிய காலக்கடனை நீண்ட காலக் கடனாக மாற்றியிருப்பதற்கு மகிழ்ச்சி. ஆனால், கடந்த ஆண்டும் இந்த ஆண்டும் தொடர்ந்து உருளைக்கிழங்குப் பயிர் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் விவசாயிகள் மிகவும் நலிந்து போயிருக்கிறார்கள். ஆகவே, நடப்பாண்டிலாவது கடனை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும்.

1978 செப்டம்பர் 7]

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் 4 தடவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடனோடு அடுத்தாண்டு வட்டியும் இரண்டு மடங்கு கூடுதலாக வரும். அந்தக் கடனையும் வட்டியையும் அந்த விவசாயிகளால் கட்ட முடியுமா என்பதையும் அரசு ஆராய வேண்டும். எனவே, கூட்டுறவுச் சங்கக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளி வைப்பது என்ற பிரச்சனைக்கு இடமில்லை. காரணம் கூட்டுறவுக் கடன் என்பது ரிசர்வ் வங்கியிலிருந்தும் வைப்பு நிதியிலிருந்தும் பெறக்கூடிய கடன். உருளைக் கிழங்குப் பயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளை அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரத்து செய்வது பற்றிக் கேட்டார்கள். அது பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதாவது ரத்து செய்வதற்கான பரிசீலனை இல்லையா அல்லது குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகத் தள்ளிப் போடுகிற பரிசீலனை இல்லையா என்பதை விளக்க வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னை விட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே அதிக விவரம் தெரிந்தவர்கள். ரத்து செய்வது என்பது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆகவே இதனை இந்த நேரத்திலே சொல்ல இயலாது. எனவே தனிக் கேள்வி போட்டால் அதனை ஆய்ந்து உரிய வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் கூட்டுறவு அரிசி ஆலை.

*வினா—62 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் அரிசி ஆலை அமைக்கும் திட்டத்திற்கு அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அனுமதி அளிக்கப்படும்?